பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: வைகாசி 23 (5—6—68) புதன் ★ வெளியூர்: வைகாசி 24 (6—6—68) வியாழன் [இதழ்: 295

சுதந்தரத்துக்குப்பின் இந்தியாவின் நிலை!

"சுதந்தரத்துக்குப்பிறகு மனித உழைப்பு சரிவரப் பயன்படுத்தப் படாததே இன்றைய நெருக்கடி களுக்குக் காரணமாகும்.

"தகுதிபெற்ற ஏராளமான இளைஞர்களுக்கு, 'வேலை கிடைக் கும்' என்ற நம்பிக்கை இல்லாத நிலைமை, நாட்டில் உருவாகியிருக் கிறது!

"சாதி, வகுப்புவாத காரணங் கள் மூலமாகத்தான் வேலை கிடைக்கும் என்ற நிலைமை இருக் கிறது!"

—சுரதா முகர்ஜி
(அ. இ. கா. க. கூட்டத்தில்)

மனிதனின் உடன்பிறப்பே பிரச்னை!

வறுமையிலும் உண்டு—வளமையிலும் உண்டு

உழைத்தும் உரிய பலன் நமக்கில்லை—உழைப்பைக் குறைத்து மிகுந்த பலன் பெறுகிறது அமெரிக்கா

உலகில் உண்மையான புகழ்பெற வழி—முதலமைச்சர் அண்ணா விளக்கம்

சென்னை, ஜூன் 5—

"வசதிகள் அளவுக்கு மீறி ஏற்பட்டுவிட்டாலும், கவலையும் பிரச்சினையும் உண்டாகின்றன; அதற்காக, 'நமது நாட்டில் வசதிகள் தேவையில்லை' என்று நான் கூறவில்லை. வறுமையிலும் சில பிரச்சினைகள் இருக்கின்றன—வளமையிலும் சில பிரச்சினைகள் இருக்கின்றன!

"இப்போது உள்ள வாழ்க்கைத்தரம் நமக்குப் போதுமென்று நான் கூற வில்லை; 'நம்முடைய வாழ்க்கைத்தரம் உயர வேண்டும்' என்று நாம் விரும்புகிறோம்; ஆனால் அமெரிக்க மக்களோ, 'கிடைத்த வளத்தை எப்படிப் பயன்படுத்துவது' என்று யோசிக்கிறார்கள்!

"பிரச்சினைகள் மனிதனோடு ஒட்டிப் பிறந்தவைதான்—அதைத் தீர்க்கும் வழி முறைகளும் ஏராளமாகக் கிடைக்கும்—என்ற நல்ல நம்பிக்கைதான், அமெரிக்காவைச் சுற்றிவந்த பிறகு எனக்கு ஏற்பட்டது!

"நமது நாட்டில் உடல் உழைப்பு இருக்கத்தான் செய்கிறது; இந்தச் சிங்காரச் சென்னையில்—நடு ரோட்டில்—வண்டியில் பாரம் ஏற்றி மாட்டுக் குப் பதிலாக முன்னே இருவர் இழுக்க, பின்னே மூவர் சேர்ந்து தள்ளிக் கொண்டு போவதைப் பார்க்கிறோம்! ஆனால் அங்கு மனிதர்கள், உடல் உழைப்பைக் குறைத்து, இயந்திரத்தின் துணையுடன் மிகுந்த பலனை அடைகிறார்கள்!

"இங்கு உழைப்பின் திறன் இருக்கிறது; அது சரியாகப் பயன்படுத்தப்படாத தால், அது, நாட்டுக்குப் பொது நட்டமாக ஏற்படுகிறது; அதை நினைக்கும் போது கவலைப்படுகிறேன்.

"அமெரிக்காவில் மண் வளமும் இங்குபோல்தான் இருக்கிறது; உழைப் பின் திறமையிலும் பெருத்த வேறுபாடு இல்லை; அங்கும் ஒருபோக சாகுபடி நிலங்களும் இருக்கின்றன"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், நேற்று கோட்டையில் உள்ள முத்தமிழ் மன்றச் சார்பில் அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் சுட்டிக்காட்டி விவரித்தார். தாம வெளிநாடுகளுக்குச் சென்று புகழுடன் திரும்பியதாக வரவேற்பு இதழில் கூறப்பட்டதையொட்டி அவர் குறிப்பிடுகையில்,

"நம்முடைய நாட்டில் உள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட்ட பின்னர்தான், உண்மை யாகவே வெளிநாடுகளில் புகழ்பெற முடியும்; அதுதான் உண்மையான புகழாகும்; மற்ற படி, 'தாழ்ந்த நிலையில் இருக்கின்ற இந்த நாட்டின் தனிச் சிறப்புக்களை எடுத்துச்சொல்லு வதற்கு வாய்ப்புக் கிடைத்தது' என்றுதான் என்றால் கூற இயலும்.

"நம்முடைய நாட் ... ச்சினைகளையும் தாங்கும் திறனையும் வெளி நாட்டவர் நன் ... பெரும் நாடு' என்று அவர்கள் நம் நாட் டைப் பற்றி ... ச்சினைகளையும் எப்படித் தாங்குகிறார்கள்' என வி ... த்தனைக்கும் மத்தியில் அமைதியோடு நாம் ... கின்றனர்"

என் ... துறையில் நாம் ... க்குவம் பெறாத நிலைமையின் ... ர் கிளர்ச்சியும் ஏற்பட்டிருக்கின்றன எனக் கூறுவது ... ள்ள அமெரிக்காவிலும் இவ்விதக் குழப்பங்கள் ... மேலும் அவர் விளக்கியதாவது:—

... லைக ... த்தை மூடிவிட்டார்கள்; நமது நாட்டில் வாய்ப்பும், வசதியும் இல்லாததால், கிளர்ச்சி நடக்கிறது என்று நினைக்கிறோம்; ஆனால் அங்கு ... ரிக்காவில் வாழ வசதி இருந்தும்—வேலை வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்ட பிறகும்—மனநிம்மதி பெற்ற பிறகும் சனநாயகம் நமக்கு முன்ன தாகப் பல ஆண்டுகளுக்கு முன்னதாக ஆரம்பிக்கப்பட்டு இருந்தும் கிளர்ச்சிகள் நடக் கின்றன; அதற்குக் காரணம், மன வெப்பம்—பரபரப்பு—திருப்தியற்ற நிலைமைகள் தான்!

எதைப் பற்றியும் கிளர்ந்து எழும் காலம் இது! கோபம் வராதவர்களுக்குக்கூட இப் போது கோபம் வருகிறது! சச்சரவுக்குப் போகாதவர்கள் கூடச் சச்சரவுக்குப் போகிறார் கள்!

மக்கள்தொகைப் பெருக்கத்தின் காரணமாக மனதில் வெப்ப நிலைமை உண்டாகிறது. ஏதா வது ஒன்றில் திருப்தி என் றால், இன்னொன்றில் அதிருப்தி உண்டாகிறது!

நல்ல கருத்துக்களைப் பாராட்டுவது தவறா?

நான் அமெரிக்காவைப்பற்றிப் பேசினால், 'போய் வந்த நாட் டைப்பற்றிப் புகழ்கிறார்' என்று சிலர் கூறலாம். அங்குள்ள நல்ல கருத்துக்களை நாம் எடுத் துக்கொள்வதில் தவறில்லை. அதுபோல் இரஷ்யாவுக்கும் போக நேர்ந்தால், அங்குள்ள நல்ல கருத்துக்களையும், நாம் அறிந்து பாராட்டுவதில் தவ றில்லை!

அவ்வளவு விரைவில் நம்மால் இயலாது!

அமெரிக்கா அடைந்துள்ள தொழில் வளர்ச்சியை, நாம் அவ்வளவு விரைவில் அடைய முடியாது; என்றாலும், அந் தச் சூழ்நிலை ஏற்பட இங்கு பாடுபடவேண்டும்.

அமெரிக்க மக்கள், எப்படி இயற்கை வசதிகளுடன் செயற்கை இயந்திரங்களைப் பயன்படுத்தி உற்பத்தியைப் பெருக்குகிறார்கள் என்று அறி வதுதான் நாம் கற்றுக் கொள்ளவேண்டிய பாடமா கும்.

இதோ ஓர் சான்று!

அமெரிக்காவில் மக்கள்தொகை குறைவு; ஆனால் நாட்டின் பரப்பு மிகப் பெரியது! அங்கு காப்பி குடிக்க ஓட்டலுக்குப் போனால், இயந்திரத்தின்மூலம் வாங்கும் காப்பிக்கு விலை குறைவு, 'சப்ளை'யர் வைத் துக் கொடுக்கும் காப்பிக்கு விலை அதிகம்! இங்கு கைவண் டிக் காப்பிக்கு விலை குறைவு; ஓட்டல் காப்பிக்கு விலை அதி கம்!

அக்கறையின்றேல் பிரச்சினைகள் தீருமா?

குடும்பக் கட்டுப்பாட்டுத் திட் டத்தில் நாம் மிகுந்த அக்கறை காட்ட வேண்டும்; இல்லை யென்றால், பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது.

அமெரிக்காவில் இருக்கும்பொ ழுது அடிக்கடி நமது நாட்டின் மக்கள் தொகையைப் பற்றிக் கேட்டு ஆச்சரியமாகப் பேசி னார்கள்!

அளவுக்கு அதிகமாக மக்கள் தொகை பெருகினால், உற்பத் தியின் பலனைப் பெற முடியாத அளவுக்குப் போய்விடும்! நன் றாக முன்னேறிய பிறகாவது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட் டத்தைத் தளர்த்தலாம்!

ஊக்கம் அளிக்குமா இந்திய அரசு?

வெளிநாட்டினர்—குறிப்பாக அமெரிக்கர்—இந்தியாவி லேயே 'தமிழகத்தை'த்தான் விரும்புகிறார்கள்; காரணம், இங்குதான் ஆங்கிலம் பேசப் படுகிறது. மற்ற மாநிலங் களில் ஆங்கிலத்தைக் காரண மில்லாமல் ஒதுக்கித் தள்ளு கிறார்கள். ஆகவே தமிழகத் திலே தொழில்கள் ஆரம்பிக்க வெளிநாட்டினர் விரும்புகிறார் கள். இதற்கு இந்திய அரசு ஊக்கமளிக்க வேண்டும்.

ஆவன செய்வது அவசியம்

தமிழகத்தில் ஆங்கிலத்தின் தரம் உயரவேண்டும். பிரான்சு நாட்டில் ஆங்கிலம் புறக்கணிக்கப்படுவதில்லை. அமெரிக்காவில் பல்வேறு

(4-ம் பக்கம் பார்க்க)

சிவசேனை குண்டர்கள் அட்டகாசம்

இரு தென்னிந்தியர் ஓட்டல்களில் புகுந்து தாக்கினர்

பம்பாய், ஜூன் 4—

தென் பம்பாயில் உள்ள இரண்டு ஓட்டல்களில் இன் றிரவு ஒரு கும்பல் புகுந்து, 'சிவசேனை வாழ்க' என்று கூச்ச லிட்டுக்கொண்டே அங்குள்ள நாற்காலி—மேசைகளையும், கண்ணாடிகளையும் உடைத்தெறிந்து அட்டூழியம் புரிந்தது!

இந்த ஓட்டல்களில் இத்தாக்குதலால் ஏறத்தாழ ரூ 10,000-வரையில் சேதம் ஏற்பட்டிருப்பதாகப் போலீசார் மதிப்பிட்டுள்ளனர்.

இந்த இரண்டு ஓட்டல்களும் தென் இந்தியர்களுடையவை யாகும்.

இந்த ஓட்டல்களில் விற்பனை செய்வதற்காக வைக்கப்பட் டிருந்த காட்சிப் பொருள்களை யும் சிவசேனைக் கும்பல் சூறை யாடியிருக்கிறது.

இரும்புக் கம்பிகளுடனும், தடி களுடனும் அந்த வெறிக் கும்பல் உள்ளே புகுந்ததும் ஓட்டல் நிர்வாகியும் பணியாட் களும் ஓடிவிட்டதாகக் கூறப் படுகிறது.

இரண்டு கால்கள் இருக்க மூன்றுவது கால் ஏன்?

மும்மொழித் திட்டத்தைத் தமிழகம் ஏற்காது!

தமிழ் ஆங்கிலம் நமக்குப் போதும்--கல்வியமைச்சர் நெடுஞ்செழியன் தெளிவுரை

சென்னை, சூன் 5

"தாய் மொழியாகிய தமிழின் முக்கியத்துவத்தை நாம் வலியுறுத்தி வருகிறேமென்ருல்—தமிழைப் பாட மொழியாக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறேமென்ருல், ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நாம் புறக்கணித்துவிடுவதாக அதற்கு அர்த்தமல்ல!

"அதேபோல, ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை வற்புறுத்தும்போது தமிழைப் புறக்கணிப்பதாக ஆகிவிடாது-

"தாய்மொழியாகிய தமிழை ஒரு காலாகவும், ஆங்கிலத்தை ஒரு காலாகவும் கொண்டு கல்வித் துறையில் முன்னேற விரும்புகிறேம். இரண்டு கால்கள் இல்லாவிட்டால் நடக்க முடியாது; தத்தித் தத்தித்தான் போக முடியும். இதற்காக மூன்ருவது செயற்கைக் காலாக எதையும் நாம் ஏற்கப் போவதில்லை.

"தமிழக அரசின் இருமொழிக் கொள்கையின் அடிப்படை இதுதான். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு கால்களையும் உறுதிவாய்ந்தவையாக ஆக்கவேண்டும் என்பதுதான் நமது நோக்கம்"

என்று, கல்வியமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள், ஆங்கிலப் பயிற்சி வகுப்பு ஒன்றைத் துவக்கி வைத்துப் பேசுகையில் தெளிவுபடுத்தினர்.

சென்னைப் பல்கலைக் கழகம், பல்கலைக் கழக மானியக் குழு மத்திய ஆங்கிலக் கழகம் ஆகியவை சேர்ந்து—சென்னையில் உள்ள பிரிட்டிஷ் கவுன்சிலின் உதவியுடன் நடத்தும் கோடைகால ஆங்கிலப் பயிற்சி வகுப்பை துவக்கிவைத்து அமைச்சர் நெடுஞ்செழியன் உரையாற்றினர்.

சென்னைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 8 கல்லூரிகள் இப்பயிற்சி வகுப்பில் பங்கு கொள்கின்றன.

தென்னிந்தியாவில் பிரிட்டிஷ் துணைத் தூதுவராக இருந்துவரும் திரு. சி. பி. பி. ஹிக்கோட், விழாவுக்குத் தலைமை வகித்தார்; பேராசிரியர் ஏ. எல். கிருஷ்ணன் வரவேற்புரையாற்றினர்.

அமைச்சர் நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில் கூறியதாவது:—

"உயர்ந்த அறிவு பெற ஆங்கிலம் இன்றியமையாதது என்று அடிக்கடி கூறப்படுகிறது. இது உண்மையே என்பதில் ஐயமில்லை.

ஆனல், நான் இன்னும் ஒரு படி மேலே போய், 'அது, நவீன சிந்தனைகளை எடுத்துரைக்கும் மொழியாக இருப்பதாலும், உலகம் முழுவதிலும் தற்போது நிலவி வரும் கருத்துக்களை வெளியிடும் மொழியாக இருப்பதாலும், கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் அறிவாளிகள் தங்கள் கருத்துக்களை எடுத்துரைத்திருக்கும் மொழியாக இருப்பதாலும் ஆங்கிலம் முக்கியமானது' என்று சொல்லுவேன்.

நமது தமிழ் மொழி மிகத்தொன்மையானது; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூட சிறந்த கவிதைகள் தமிழில் இயற்றப்பட்டிருக்கின்றன.

தமிழுக்கு மிகச் சிறப்பான இலக்கிய மரபு உண்டு.

நீண்ட வரலாறு உடைய தமிழ் மொழி, நெடுகிலு தனது தூய்மையையும், உணர்ச்சியையும் பேணி வந்திருக்கிறது; இப்போது ஒரு நவீன மொழியாக வளர்ச்சி கண்டு வருகிறது; இந்த வளர்ச்சிக்கு பிற மொழிகளை அறிந்தவர்கள் இருந்தாக வேண்டியது அவசியமாகும்.

உலகப் பெருமொழிகளில் ஒன்ருன ஆங்கிலத்திலிருந்து நாம் உதவி பெற விரும்புகிறேம். எனவே, ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தை நாம் புறக்கணிக்க முடியாது.

இந்தக் காரணத்துக்காகத்தான், மாநிலத்திலுள்ள துவக்கப் பள்ளிகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்கும் முயற்சியை அரசு பெரிய அளவில் தொடங்கியிருக்கிறது; இதற்காக மாநிலத்தில் நன்கு நிலையங்களை நடத்திவருகிறது; இவற்றை ஒரு தனி அதிகாரி கவனித்துவருகிருர்.

கல்லூரி புதுமுக வகுப்பில் சேருபவர்களுக்கு ஆண்டுத் துவக்கத்தில் ஆங்கிலத்தில் தீவிரப் பயிற்சி அளிக்கும் திட்டத்தில் சென்னைப் பல்கலைக்கழகம் மிகுந்த அக்கறை கொண்டிருக்கிறது

பி.யு.சி வகுப்பில் சேருபவர்கள் பெரும்பாலோர் உயர்நிலைப் பள்ளிகளில் தாய் மொழியாகிய தமிழில் பாடம் படித்தவர்கள்; எனவே, கல்லூரியில் சேர்ந்ததும், போதிய ஆங்கில அறிவு இல்லாத காரணத்தால் அவர்கள் சிரமப்படுவது இயல்பேயாகும்.

ஆங்கிலத்தில் விஞ்ஞானப் பாடங்களைச் சொல்லித் தரும்போது அவர்கள் புரிந்துகொள்வது கடினமாயிருக்கிறது. இந்த வகையில் உயர்நிலைப் பள்ளிகளுக்கும்—கல்லூரிக்குமிடையே ஒரு பிளவு இருக்கக் காண்கிறேம்.

தட்டுத் தடங்கலின்றி கல்லூரிப் படிப்பைத் தொடர்வது இயலக்கூடியதாக இருக்க வேண்டுமெனில், இந்தப் பிளவை இணைக்க ஒரு பாலம் அமைத்தாக வேண்டும்.

உயர்நிலைப் பள்ளிக்கும்—கல்லூரிக்குமிடையில் இத்தகைய இணைப்பை ஏற்படுத்துவதற்காகவே இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது என்பதை வலியுறுத்தத்தானே என்னவோ—'இணைப்புப் பயிற்சித் திட்டம்' என்று இது அழைக்கப்படுகிறது.

இந்தப் பயிற்சியில் புதிய கற்பிக்கும் முறைகளும், கற்பிக்கும் சாதனங்களும் பயன்படுத்துவது கண்டு மகிழ்ச்சியடைகிறேன்.

திருத்தமான உச்சரிப்புகளைச் சொல்லித் தருவதில் போதிய கவனம் செலுத்தப்படுகிறது.

மாணவர்கள் ஆங்கில அறிவை வளர்த்துக்கொள்வதுடன் மட்டுமன்றி, பொதுவாகப் பாடம் பயிலும் முறையை உணரவும் இந்தப் பயிற்சி துணைபுரிகிறது.

மொழி ஒரு கலையாகும்; வெறும் பாடப் புத்தகங்களையும், இலக்கண நூல்களையும் மட்டுமே துணையாகக் கொண்டு இந்தக் கலையில் கைதேர்ந்தவர்களாகிவிட முடியாது; திருத்தமான உச்சரிப்பு சொல் நயம் ஆகியவற்றையும் கற்ருக வேண்டும்; அப்போதுதான், ஆங்கிலத்தை அதற்கே உரிய முறையில் பேச முடியும். இந்த நோக்கங்களுடன்தான் இந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது

கல்வித் துறையிலுள்ள ஒரு பெரிய தேவையை நிறைவு செய்வதற்காக மேற்கொள்ளப் பட்டுள்ள இந்தியா – பிரிட்டிஷ் கூட்டு முயற்சியாகும் இது."

இந்தப் பயிற்சியை நடத்துவதில் ஒத்துழைத்த நிறுவனங்களுக்கு தமிழக அரசின் பாராட்டுதலை அமைச்சர் தெரிவித்துக் கொண்டார்; ஆங்கிலத்தைக் கற்பிக்கும் துறையில் பிரிட்டிஷ் கவுன்சில் அளித்துவரும் அரிய உதவிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டார்.

உத்தரப் பிரதேசக் காங்கிரசில் பிளவு!

குப்தா-திரிபாதிமீது குற்றச்சாட்டு

புதுடில்லி, சூன் 4—

உத்தரப் பிரதேசக் காங்கிரசுத் தலைவர்களின் பேச்சு மாநிலத்திலுள்ள பல முக்கிய காங்கிரஸ் தலைவர்களிடையே பிளவை ஏற்படுத்தியிருக்கிறது.

குறிப்பாகக் காங்கிரசுக் கட்சியின் செயற்குழு, ஆட்சி மன்றக் குழு ஆகியவைகளுக்கு உறுப்பினர்களை நியமிக்கும் பிரச்சினைகளில் தங்களுடைய அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்ததன் காரணமாக சி பி. குப்தா மீது, தற்போது உ. பி. மாநில காங்கிரசுக் கட்சித் தலைவராக உள்ள கமலாபதி திரிபாதி மீதும் பல காங்கிரசுக்காரர்கள் அதிருப்தி கொண்டுள்ளனர்.

'மும்மொழித் திட்டம் செல்லாது'

'அரசியல் சட்டத்துக்கு முரணனது' என வழக்கு

இந்தியக் கல்வியமைச்சருக்கு வங்க உயர் நீதிமன்றம் 'நோட்டீசு'

கல்கத்தா, சூன் 4—

1967-ம் ஆண்டு செப்டம்பர் 16-ஆம் நாள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மும்மொழித் திட்டமும், அதனை ஒட்டிய ஆட்சிமொழித் தீர்மானமும் சமஸ்கிருதத்தின் வளர்ச்சியையும், படிப்பையும் எதிர்ப்பதாக இருப்பதால், அத்தீர்மானங்களை அகற்றிவிட ஏன் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது என்பதற்குச் சமாதானம் கூறுமாறு மத்தியக் கல்வி அமைச்சரகத்திற்குக் கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதி திரு. மித்ரா, 'நோட்டீசு' அனுப்பியிருக்கிருர்.

தயாரேஷ் நாராயண் சக்கரவர்த்தி என்பார் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் 226-வது விதியின்கீழ் கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் அளித்துள்ள 'ரிட்' மனுவின்மீதே மேற்கண்ட நோட்டீசு அனுப்பப்பட்டிருக்கிறது.

இம்மனுவில், மும்மொழித் திட்டம் செல்லத்தக்கதல்லவென்றும், இத்திட்டம் அரசியல் அமைப்புச் சட்டம் 8-வது பிரிவு, மற்றும் 351, 14-வது விதிகளை மீறப்பட்ட நிலையில் இருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வேலை தேடுவோர் தொகை உயரும்!

நான்காம் திட்டம் காணப்போகும் பலன்

புதுடில்லி, சூன் 5—

மக்கள் தொகை அதிகரித்துக் கொண்டே வருவதால் இந்தியாவின் நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில புதிய வேலையை எதிர்பார்த்து நிற்போர் தொகை 2 கோடியே 73 இலட்சமாக இருக்கும்; இவர்களில் பாதிப் பேருக்குத்தான் வேலை வாய்ப்புக் கிடைக்கும்.

இத்திட்டத்தின் துவக்கக் காலத்தில் 95 இலட்சம் பேர் வேலை வாய்ப்பு இல்லாது இருப்பார்கள்; இவர்களின் எண்ணிக்கை திட்ட முடிவு காலத்தில் 2 கோடியே 80 இலட்சமாகப் பெருகியிருக்கும்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 23 ஆயிரத்து 750 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டது; இத்திட்டத்தின் விளைவாக 180 அல்லது 190 இலட்சம் பேருக்கு வேலை வாய்ப்புக்கள் ஏற்பட இருந்தது.

இப்போது திட்டத்தின் மதிப்பீடு குறைக்கப்பட்டிருப்பதால், வேலை வாய்ப்பும் குறையும்; வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும்.

இந்தியாவைப் பிடித்துள்ள பீடை?

"நம் நாட்டைப் பிடித்துள்ள பீடைதான் என்ன? நமது தொழிலாளர்கள், எஞ்சினீயர்கள் எல்லோரும் நல்ல புத்திசாலிகள்; புதிய விஷயங்களைப் புரிந்து கற்றுக்கொள்ளும் திறமையுள்ளவர்கள்.

"வெளிநாடுகளில் வேலை செய்யும் நம் இளைஞர்களில் சிலரது திறமையைப் பார்த்தால யாருமே பிரமித்துப் போவார்கள். அவர்கள் எல்லோரும் இந்தியாவுக்கு வரவேண்டும் என்ற ஆசை உள்ளவர்களே!

"ஆனல் இந்தியாவில் உள்ள சூழ்நிலையானது, எந்தப் புதிய முயற்சிக்கும் ஊக்கமில்லாது போகும்படிச் செய்யக்கூடியதாக இருக்கிறது. இதையெல்லாம் பார்த்தால் நெஞ்சு குமுறுகிறது. ஏன் இப்படி முன்னேற்றமின்றித் தேங்கிக் கிடக்கிறேம்? நம்மைப் பிடித்துள்ள 'சனியன்'தான் என்ன?"

இவ்வாறு ரிசர்வ் பாங்கியின் முன்னள் கவர்னரான திரு எச்.வி.ஆர். ஐயங்கார், 'தினமணி' இதழில், 'நமது தொழில் நிலவரத்தில் உள்ள சீர்கேடுதான் என்ன?' என்ற தலைப்பில் எழுதியுள்ள கட்டுரையில், இந்தியத் தொழில் நிபுணர் ஒருவர் கூறியதை மேற்கோளாகக் குறிப்பிட்டிருக்கிருர்.

காங்கிரசை நம்பிப் பதவியேற்றவர் கதி

நம்பியவரை நட்டாற்றில் விடுகின்றனர்

பஞ்சாப் முதலமைச்சருக்குச் சோதனைக் கட்டம்

புதுடில்லி சூன் 4—

"பஞ்சாபில் அமைக்கப்பட்டுள்ள கில் அமைச்சரவைக்குக் காங்கிரசுக் கட்சி அளித்துவரும் ஆதரவைத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்" என்று இங்கு ... ள பஞ்சாப் மாநிலக் காங் ... தலைவர்கள், காங்கிரசு ... தெரிவித்திருக்கிருர்

... சனையின் ...

தொடா... ஆதர... செய்ய வேண்டும்" என்று ... வந்தடைந்துள்ள பஞ்சாப் ம... முதலமைச்சர் கில், உள்துறை... அமைச்சரைச் சந்தித்துக் பே... டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

டில்லி அரசியலில் ஒரு புதுமை!

அமைச்சரவைமீது அமைச்சரே குற்றச்சாட்டு

இந்திரா காந்திக்கு அசோக் மேத்தா கடிதம்

புதுடில்லி, சூன் 5 –

தமது இலாகா கோண்டுவந்துள்ள மூன்று முக்கியத் திட்டங்கள்மீது அமைச்சரவை முடிவெடுக்கத் தவறியதாகப் புகார் கூறி தலைமையமைச்சருக்குப் பெட்ரோலிய—இரசாயனத்துறை அமைச்சர் அசோக மேத்தா, கடிதம் எழுதியிருப்பதாகத் தெரிகிறது. அத்திட்டங்களில் சில ஆறு மாத காலமாக இருக்கின்றனவாம்!

ஓர் அமெரிக்கக் கம்பெனி ஒத்துழைப்புடன் டாட்டாவின் உர உற்பத்தித் திட்டம்; காம்பே குடாவில் எண்ணெய் கண்டுபிடிக்க டென்னிகோவின் திட்டம்; அசாமுக்கும், குசராத்துக்கும் எண்ணெய் உரிமைப் பணத்தை எண்ணெய்-இயற்கை வாயுக் குழு அதிகரிப்பது— ஆகியவை அந்தத் திட்டங்களாகும்.

டாட்டா திட்டத்தில் உள்ள அந்நிய ஒத்துழைப்பின் நிபந்தனைகளைச் சில அமைச்சர்கள் எதிர்த்திருப்பதாகத் தெரிகிறது.

"உயர்த்தப்பட்ட உர இலக்கை அடைய ஒத்துழைப்புக் கொள்கையைத் தளர்த்துவது அவசியம்" எனத் தம் கடிதத்தில் மேத்தா கூறியிருக்கிருர்.

"திட்டத்தை விரிவாக ஆராய வேண்டி... அமைச்சர... துணை... அறி... மேத்...

திட்... வதில் ... காட்டவில்...

"அந்நிய ஒ... காலவரம்பின்... மாட்டார்கள்; அ... கம்பெனி பொறு... இழந்துவருகிறது; அமைச்சரவை முடிவுக்காக சுமார் 6-மாத காலமாக டென்னிகோ காத்திருக்கிறது" என்றெல்லாம் மேத்தா, குறை கூறியிருக்கிருர்.

'கேரோ'க்களினால் ஏற்படும் தீய விளைவுகள் !

"'கேரோ' நடந்த இடங்களில் பெரும்பாலானவற்றில் ஒழுங்கு குலைந்துவிட்டது !

"மெதுவாக வேலை செய்வது—விதிகளின்படி வேலைசெய்வது போன்ற நடவடிக்கைகளில் தொழிலாளர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் !

"உற்பத்தி அளவும், தரமும் குறைந்துவிட்டன !

"சில தொழிற்சாலைகளில், 'சாமான்கள் தேவை' எனக் கோரி வரும் 'ஆர்டர்'கள் நின்றுவிட்டன"

என்று, கிழக்குப் பகுதியில் முதலாளிகள்—தொழிலாளர் உறவு நிலையைப் பற்றி ஆராய்வதற்காகத் தேசியத் தொழிலாளர் குழுவால் அமைக்கப்பட்ட குழு, தொழிலாளர்கள், 'கேரோ'வை ஓர் ஆயுதமாக பயன்படுத்துவதை எதிர்த்துக் கருத்தறிவிக்கையில் சுட்டிக்காட்டியிருக்கிறது மேலும் அது கூறியிருப்பதாவது :—

"'கேரோ' நடவடிக்கையானது, தொழிற்சங்க இயக்கம், கூட்டுப் பேரம் இவற்றின் வேரையே அறுப்பதாகும் ; எனவே, தொழிலாளர்கள் தங்கள் கோரிக்கைகளைப் பெற 'கேரோ'வில் இறங்கக்கூடாது. எங்காவது 'கேரோ' நடந்தால், முதலாளிகள்—அரசினர்—தொழிற் சங்கம் ஆகிய முத்தரப்பினரும், அதை உறுதியுடன் சமாளிக்க வேண்டும்.

"மேற்கு வங்காளத்தில் 'கேரோ'வினால் பொறியியல் தொழில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

"ஊதியக் குழுச் சிபாரிசுகளை நிறைவேற்ற இயலாமல் தொல்லையற்ற சிறிய பொறியியல் தொழிற்சாலைகளில் மட்டுமன்றி, தொழிற் சங்கத்துக்கும்—நிர்வாகத்தினருக்குமிடையே நல்லுறவு நிலவிவந்த தொழிற்சாலைகளிலும் ஏதாவதொரு பிரச்சினைமீது நீண்ட நேரம் 'கேரோ'க்கள் நடந்திருக்கின்றன."

பாலமதி மலைக்குச் சாலையமைப்பு

ரூ. 2-இலட்சம் செலவில் வேலை துவங்கும்

"1,800 அடி உயரத்தில் உள்ள பாலமதி மலைக்குச் சாலை அமைக்கும் வேலை விரைவில் மேற்கொள்ளப்படும் ; ரூ 2 இலட்சம் செலவில் இந்தச் சாலை அமைக்கப்படும் ; இதை வேலூர், கணியம்பாடி, திமிரி ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் பயனடையும். நான்கு கட்டத்தில் வேலை நடக்கும் ; சூன் முதல் வாரத்தில் முதல் கட்ட வேலை ஆரம்பமாகும்'

என்று மாவட்டக் கலெக்டர் பெல்லியப்பா, நிருபர்களிடம் தெரிவித்தார்.

வேலூர், கணியம்பாடி, திமிரி ஒன்றியங்களிலிருந்து இப்பணிக்குத் தலா ரூ. 25,000 கிடைக்கும்.

சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், ஒன்றியத் தலைவர்கள், கல்வி அதிகாரிகள் கூட்டம் நேற்று நடந்தது ; அதுபோது, வடாற்காடு மாவட்டத்தில் புதியதாக 63 ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் தி[illegible]கும், 22 ஆரம்பப் ப[illegible] களை உயர்த்துவ[illegible] உயர்நிலைப் பள்[illegible] ஆரம்பி[illegible] அங்[illegible]

[illegible], சொசைட்டியில் செய் [illegible] இலக்கு முடிந்ததும் தாலுகாக்[illegible]ளிடையே உணவுத் தானிய நடமாட்டக் கட்டுப்பாடுகள் நீக்கப்படும்" என்று கலெக்டர் கூறினார்.

சேலம் -- திருச்சிக்கு இரவு நேரப் பேருந்துகள்

சென்னை, சூன் 5—

இன்றுமுதல் சென்னையிலிருந்து திருச்சிக்கும், சென்னையிலிருந்து சேலத்துக்கும் இரண்டு இரவு நேர விரைவுப் பேருந்துகளை விடத் தமிழக அரசு போக்குவரத்துத் துறையினர் முடிவு செய்துள்ளனர்.

சென்னையிலிருந்து இரவு 9-30 மணிக்கும், திருச்சியிலிருந்து இரவு 8-30 மணிக்கும் ஆக இரண்டு பேருந்துகள் இவ்வழித்தடத்தில் ஓடும்.

204 மைல்கள் கொண்ட இவ்வழித்தடத்தில் பயண நேரம் 9 மணி 14 நிமிடங்களாகும். இதற்குக் கட்டணம் ரூ. 10.20 ஆகும்.

இதைப்போலவே சென்னையிலிருந்து இரவு 9-மணிக்கும், சேலத்திலிருந்து இரவு 10-மணிக்கும் இரண்டு பேருந்துகள் விடப்படும்.

இவ்வழித்தடம் 207 மைல்களைக் கொண்டதாகும்.

ரூ. 10.40 கட்டணமாக வசூலிக்கப்படும்.

இவ்வழித்தடத்தில் 9 மணி 23 நிமிடங்களில் பேருந்துகள் வந்து சேரும்.

இப்பேருந்துகள ஒவ்வொன்றிலும் இரண்டு ஓட்டுநர்கள் இருப்பார்கள்.

'ஏழ்மை ஒழிய நிதி தருவோம்'

'உலக அமைதிக்கு வழிகோலுவோம்'

பிரிட்டனின் தீவிரத் திட்டம்

"வளர்ந்துவரும் நாடுகள், ஏழ்மை நாடுகள் ஆகியவைகளுக்குப் பிரிட்டன் அளித்துவரும் நிதி உதவியை அதிகரிக்கவும், உலக நாடுகளுடன் தன் வர்த்தகத்தைப் பெருக்கவுமான நடவடிக்கைகளில் பிரிட்டன் தற்போது தீவிரமாக இறங்கியிருக்கிறது.

"பெயரளவுக்குக் கொடுக்காமல், பயனையும், தேவையையும் நன்கு பரிசீலித்த பிறகே உதவித் தொகை அளிக்கப்படுகிறது.

"உலக மக்கள் அனைவரும் ஏழ்மை ஒழிந்து மகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும் இருந்தால்தான் உலக அமைதி காண இயலும்"

என்று பிரிட்டிஷ் பரபுக்கள் சபையில், வெளிநாடுகளுக்கு உதவியளிப்பதற்கு நிதி ஒதுக்குவது பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் காமன்வெல்த் அமைச்சர் கூறியிருக்கிறார்.

விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ள அதிசயக் கருவி !

ஆக்கவேலைக்கும் அழிவுக்கும் பயன்படக்கூடியது அணுசக்தி !

அணுசக்தியைப் பயன்படுத்துவதில் விபத்து நிகழ்ந்தால் அணுக்கதிர் வீச்சி ஏற்பட்டு, மனிதர்களின் உடலுக்கும் உயிருக்கும் தீங்கு ஏற்படும்.

[illegible]ரில் பயன் [illegible]சயமான [illegible]ஞ்ஞானி [illegible] இதற்கு [illegible] பெயர்

[illegible]ருந்து இரயில் [illegible] இயந்திரங்களை [illegible]லவில் ஜெர்மன் [illegible] தயாரித்து வருகிறார் [illegible] இயந்திரச் சாதனம், [illegible]கதிர் வீச்சு ஏற்பட்டால் உடனே அறிந்து விஞ்ஞானிகளுக்குத் தெரிவிக்கும்.

அணுக்கதிர் துகள்களை அப்புறப்படுத்துவதற்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதிலும் இந்த சாதனம் பயன்படும்.

அறிஞர் அண்ணா மணிவிழா

கழகக் கலைஞர்களுக்கு வேண்டுகோள்

"முத்தமிழ்க் கலைக்குத் தொண்டாற்றிய தமிழர்கள் எத்தனையோ பேருண்டு. கலைத்துறையில் பகுத்தறிவுபூர்வமான கருத்துக்களையேற்றி இலக்கியமாகச் சமைத்த மூலமுதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களே—இது நாடறிந்த உண்மையாகும்.

"இன்றையத் தமிழ் மறுமலர்ச்சியைத் தொடங்கி வைத்த அண்ணாவின் அடிச்சுவட்டினையொட்டி, சென்ற இருபதாண்டுகளாகப் பிரச்சார முறையிலும், பயில் முறை—தொழில் முறைகளிலும் நாடகங்கள் வரைந்தோர் — மேடையேற்றி நடித்தோர் — நடிப்பவர் — தமிழகமெங்கணும் ஏராளமானவர் உண்டு.

"அண்ணாவின் கால்வழி வந்த இவ்வருந் தமிழ்க் கலைஞர்களைப் பற்றிய தகவல்களைக் கொண்ட தொகுப்பு நூல் ஒன்றினை, அண்ணாவின் மணிவிழாவினையொட்டி வெளியிட ஏற்பாடு நடந்துவருகிறது.

"எனவே, புதிய கலையாக்கத் துறையில் ஈடுபாடும் தொடர்பும் கொண்டு அண்ணாவின் பரம்பரையாக விளங்கிடும் நாடக ஆசிரியர்கள் — நடிகர்கள் — நடிகையர் — இசைவாணர் மற்றுமுள்ள கழகக் கலைஞர்களும், தமது வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்—படைத்த நடகங்கள்—பங்குகொண்டு நடித்த நாடகங்கள்—கலை நிகழ்ச்சிகள் மேடையேற்றிய காலம்—இடம் பற்றிய விவரங்களை அவரவர் புகைப்படங்களோடு எனக்கு அனுப்பி உதவுமாறு வேண்டுகிறேன்"

என, திரு சலகை ப. கண்ணன் அறிவிக்கிறார்.

முகவரி:— சலகை ப கண்ணன்.
C/o 'மாலை மணி', சென்னை-2.

சென்னை நக்கீரர் கழக திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி

திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி—கோடை விடுமுறைக்குப் பிறகு—சூன். 13-ம் நாள் வகுப்புகள் தொடங்கப்பெறும்.

வழக்கம்போல் வித்துவான் புகுநிலை—வித்துவான் முதனிலை—வித்துவான் நிறைநிலை — தமிழ் எம்.ஏ. வகுப்புகள் தொடர்ந்து நடைபெறும்.

இவ்வாண்டு இலவசக் கல்வெட்டு வகுப்பும் தொடர்ந்து நடைபெறும்.

சமார் 18 தமிழ் ஆசிரியர்கள் அன்புப் பணி ஆற்ற ஆர்வமுடன் இசைந்துள்ளனர்.

ஞாயிறு நீங்கலாக ஒவ்வொரு நாளும் மாலை 6-15 மணி முதல் 7-45 மணிவரை வகுப்புகள் நடைபெறும்.

இடம் :—ஏ. ஆர். சி. மகளிர் உயர்நிலைப் பள்ளி, 44, பவழக்காரத் தெரு, மண்ணடி சென்னை-1,

ஒவ்வோர் ஆண்டும் நடைபெறும் பல்கலைக் கழகப் புகுநிலை—முதனிலை—நிறைநிலைத் தேர்வுகளுக்குச் சென்று வெற்றி பெற்ற மாணவர்களில் முதல்தர மாணவர்களாக எமது கல்லூரியில் தேறியவர்களுக்குப் பேராசிரியர் கா. நமச்சிவாயர் நினைவுப் பதக்கங்கள் வழங்கப்பெறும்.

ஒவ்வோர் ஆண்டும் தேர்வுக்குச் செல்லும் எல்லா வகுப்பு மாணவர்களும் தேர்வில் வெற்றி பெறுகின்றனர்.

மகளிருக்குத் தனி இடம் உண்டு ; விளக்குச் செலவுக்கு வேண்டிய நன்கொடைக் கட்டணம் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிற விவரங்கள் அறிய, 'செயலாளர், நக்கீரர் கழகம், 'தமிழகம்', 27, பிள்ளையார் கோயில் தெரு, தண்டையார்பேட்டை, சென்னை—21' என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

சர்க்கரை

டெண்டர் அறிவிப்பு

கட்டுப்பாட்டிற்குட்படாத சர்க்கரை 1443 குவிண்டால், ஆலை வாயில் விற்பனைக்குத் தயாராக இருக்கிறது.

முத்திரையிட்ட டெண்டர்கள் 12—6—68-ம் தேதி வரை தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ பெற்றுக் கொள்ளப்படும்.

டெண்டரைக் காரணம் காட்டாமல் நிராகரிக்க ஆலையாருக்கு உரிமை உண்டு.

இதர விவரங்கள் ஆலை அலுவலகத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.

(ஒ-ம்) கே. பி. சீனுவாசன்,
பொது நிர்வாகி (பொறுப்பிறுப்பு)
கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை,
மூங்கில்துரைப்பட்டு, (வழி) சங்கராபுரம்,
தென் ஆற்காடு மாவட்டம்.

சென்னை 25-வது வட்ட டாக்டர் சி. நடேசனார் இரவுப் பள்ளி

சென்னை-பெத்துநாயக்கன் பேட்டையில் கடந்த 11 ஆண்டுகளாகச் செவ்வனே இயங்கிவரும் மணவழகர் மன்றத்தின் ஆக்கப் பணிகளில் ஒன்றாகிய டாக்டர் சி. நடேசனார் இரவுப் பள்ளி, ஏழை மாணவ-மாணவியர் கல்வி நலனுக்காக நாள்தோறும் மாலை 6 மணிமுதல் 8-30 மணிவரை (ஞாயிறு தவிர்த்து) 1-வது வகுப்பு முதல் 8-வது வகுப்புவரையில் தனித்தனியே வகுப்புகள் வைத்து அனுபவம்செறிந்த தனித் தனி ஆசிரியர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது.

இந்த இரவுப் பள்ளியின் கோடை விடுமுறை 1—5—68 முதல் 9-6—68-வரை விடப்பட்டுள்ளது ; 10—6—68 அன்று மாலை 6-மணிக்குத் திறக்கப் படும்.

சென்ற ஆண்டல், இந்த இரவுப் பள்ளியில் பயின்ற மாணவ-மாணவிகள், கணிசமான அளவிற்கு, மேல் வகுப்புகளுக்குச் சென்றுள்ளனர்.

இவ்வாண்டு (1968—69) இந்த இரவுப் பள்ளியில் மாணவ-மாணவிகளைச் சேர்க்க விரும்பும் பெற்றோர்கள், நாள்தோறும் மாலை 6-மணிமுதல் 9-மணிவரை மன்றத் தலைமை நிலையத்தில் (2, முருகேச முதலி தெரு, சென்னை-1) தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறது.

என். ஜி. ஜி. ஓ. மாநில மாநாடு

சென்னையில் நடத்த ஏற்பாடு

தமிழக அரசிதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்கள் 44-வது மாநில மாநாடு, சூலை 13-ம் நாள் சென்னையில் நடைபெறும். முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் கலந்துகொள்ள இசைவு தெரிவித்திருக்கிறார்கள்.

இந்த மாநாடு, சூலை 13, 14 ஆகிய நாட்களில் தஞ்சையில் நடைபெறவிருப்பதாகச் சில ஏடுகளில் ('நம் நாடு' இதழில் அல்ல) செய்தி வந்திருப்பது சரியல்ல என்று மேற்படி சங்கத் தலைவர் அறிவிக்கிறார்.

திரு.வி.க.தமிழ்க் கல்லூரி

இவ்வாண்டு கோடை விடுமுறைக்குப் பின்னர் இக்கல்லூரியில் 5—6—68 முதல் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்பெறும் தமிழ் வித்துவான், தமிழ் எம்.ஏ. தேர்வுகட்குரிய வகுப்புகள் தொடங்கப்பெறும்.

சென்னை இராயப்பேட்டை மோபரீஸ் சாலை 3-எண்ணுள்ள கட்டிடத்தில் நாள்தோறும் மாலை 6-30 மணி முதல் இரவு 8 மணி வரை கல்லூரி நடைபெறும்.

"தலைசிறந்த பேராசிரியர்களும் புலவர்களும் இக்கல்லூரியில் அன்புப் பணிபுரிய இசைந்துள்ளனர்" என்று, கல்லூரி பொறுப்பாளர் அறிவிக்கிறார்.

'பதினாறும் பெறுக'!

சென்னை அறிஞர் அண்ணா நாடக மன்றத்தினர், சலகை ப. கண்ணன் அவர்களின் 'பதினாறும் பெறுக' என்ற புதிய குடும்ப நலச் சீர்திருத்த நாடகம் ஒன்றினை நடத்த ஏற்பாடு செய்துள்ளனர்.

பாடல்கள் நிறைந்த இப்புதுமையான நாடகத்தைத் தமிழக நலத் துறை அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா அவர்கள் முன்னிலையில், சூன் 9 ஆம் நாள் சென்னையில் அரங்கேற்றிட மன்றத்தின் பொறுப்பாளர் திரு. பி. வி. துரையரசன் ஏற்பாடு செய்துவருகிறார்.

காங்கிரசு ஏட்டின் விஷமச் செய்தி

என்.ஜி.ஜி.ஓ. சங்கத் தலைவர் மறுப்பு

தமிழ்நாடு என். ஜி. ஜி. ஒ. சங்கத் தலைவர் திரு. வி. தேவநாதன் அறிவிப்பதாவது :—

'ஜெயபேரிகை' மே 26-ம் நாள் இதழில், செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரை சைதாப்பேட்டையிலிருந்து காஞ்சிக்கு மாற்றும் திட்டத்தை என். ஜி. ஜி ஓ-க்கள் சங்கம் எதிர்ப்பதாக மத்திய சங்க நிர்வாகி—மத்திய செயற்குழு உறுப்பினர் என்கின்ற பெயரில்—திரு சி.எஸ். நாகராசன் அறிக்கை வெளியிட்டுள்ளார் ; இது மிக மிகத் தவறான செய்தி என்பதனைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சி. எஸ். நாகராசன் என். ஜி ஜி. ஓ. சங்க நிர்வாகியும் அல்லர். மத்திய செயற்குழு உறுப்பினர் பதவியையும் 28—4—68 அன்று நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் இராஜினாமாச் செய்துவிட்டு வெளியேறியவர் ஆவார்.

பத்திரிகைகளுக்கு அறிக்கைகளை, மாநிலத் தலைவர் மட்டுமே கொடுக்கலாம் ; அந்த அறிக்கைதான் சங்கத்தின் பெயரால் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒன்றாகும் ; எனவே, திரு நாகராசனின் விஷமத்தனமான செய்கைக்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மாநில என். ஜி. ஜி. ஓ. சங்கத் தலைவர் பெயரில் வெளிவரும் அறிக்கைகளைத் தவிர வேறு எதனையும் நம்பவேண்டாம் என இதன் மூலம் தெரிவித்துக்கொள்வதுடன், மாநில சங்கத் தலைவராகிய என்னைத் தவிர வேறு எவரும் அறிக்கைகள் அனுப்பினாலும், வெளியிட்டு விபரீதத்தை விளைவிக்கவேண்டாம் என பத்திரிகைகளையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத் தலைநகரை காஞ்சிக்கு மாற்றுவது பற்றி எந்தவிதமான கருத்து வேற்றுமையும் கிடையாது என்பதனைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முகவரி மாற்றம்

தொ. து. அன்புச்செழியன்,
செயலாளர், பம்பாய்
திமுக. தலைமைக் குழு,
17, போர்சால்—என்-7,
பிலாய் ரோடு, பம்பாய்-11.

கழக ஆட்சியை பாராட்டக்கூடாதாம்

கட்சி மேலிடத்தில் கருத்திருமன் முறையீடு

தமிழகத்தில் சட்டம்-ஒழுங்கு குலைந்ததாக ஓலம்

புதுடில்லி, ஜூன் 4—

அனைத்திந்தியக் காங்கிரசுக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய தமிழகச் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவரான திரு.பி.ஜி. கருத்திருமன், தமிழ்நாட்டில் சட்டமும் ஒழுங்கும் கெட்டுவிட்டதாகவும், நிலைமை மிகவும் மோசமாகி வருவதாகவும் ஓலமிட்டிருக்கிறார்.

அரசியல் நிலைமை பற்றி நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இந்த 'அதி அற்புதமான அரசியல் கண்டுபிடிப்பை' வெளியிட்டிருக்கிறார் !

"தமிழகத்தில் மோசமாகிக்கொண்டிருக்கும் சட்டம்-ஒழுங்கு நிலையை மத்திய அரசு உன்னிப்பாகக் கவனித்து வரவேண்டும்" என்றும் முறையிட்டுக் கொண்டிருக்கிறார்.

அவர் இத்துடன் நிற்கவில்லை; தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியை மத்திய அமைச்சர்கள் வாய்விட்டுப் புகழ்ந்துவிடுகிறார்களாம்; இது தமிழகக் காங்கிரசுக் கட்சியினரை மிகவும் பாதிக்கிறதாம். தமிழகத்தில் காங்கிரசு திறமையான எதிர்க் கட்சியாக இயங்க, மத்திய அமைச்சர்களின் இந்தப் போக்கு இடையூறாக இருக்கிறதாம். எனவே, 'இனித் தி.மு.க. ஆட்சியை மத்திய அரசினர் பாராட்டாமல் இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சித்திரப்பாவை நாட்டிய நாடகம்

தென்னகப் பல்கலைக் குழுவின் வளர்ச்சி நிதிக்காக, 6—6—68 மாலை 6-மணிக்கு, சென்னை இராஜா அண்ணாமலை மன்றத்தில், அன்னை கலைக் குழுவினர் அளிக்கும் செல்வி அ. மல்லிகையின் 'சித்திரப்பாவை' (மாதவி) நாட்டிய நாடகம் நடைபெறும்.

ஈரோடு நகரக் கிளை

கோவை மாவட்டம் ஈரோடு நகரக் கிளையின் வார்டுகள் வாரியான தேர்தல்கள், புதிதாக விரிவாக்கப்பட்ட வார்டுகளின் அடிப்படையில் நடத்தப்பட வேண்டும்.

வார்டுகளின் உட்கிளைத் தேர்தல்கள் 8, 9 ஆகிய நாட்களில் தலைமைக் கழகச் சார்பான ஆணையாளரின் தலைமையில் நடைபெறும்.

உறுப்பினர்கள், தாங்கள் தலைமைக் கழகத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்து கொண்டபோது அளித்த முகவரிகளின் அடிப்படையில், அவரவர் முகவரியில் அமையும் வார்டுகளின் தேர்தல்களிலேயே அவர்கள் கலந்து கொள்ளும் வகையில் அறிவித்து ஆவன செய்யுமாறு ஈரோடு கிளை நிர்வாகிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

'அறிவகம்'
சென்னை-13
4—6—68

—தலைமைக் கழகம்
(தி.மு.க.)

தேர்தல் நிதி

	ரூ. காசு
25-3-68 இதழில் வெளிவந்த விவரப்படி	1,42,418.94
26-5-68 அன்று திருச்சியில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தின் வசூல் தொகையில் பொருளாளர் அவர்களிடம் சேர்ப்பித்த தொகை	5,500.00
குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் திரு. கந்தசாமி அவர்களுக்குக் கார் பரிசளிப்பு விழாக் கூட்டத்தில் பொருளாளரிடம் அளித்த தொகை	500.00
பொருளாளர் மு. கருணாநிதி அவர்களால் திருச்சி, குளித்தலை நிகழ்ச்சிகளின்போது பெயர்சூட்டிய வகையிலும் மற்றும் சில்லறையாகவும்	40.00
விவரம் தெளிவாகத் தெரிவிக்கப்படாமல் கறுப்பு—சிவப்பு பை ஒன்றில் பொருளாளரிடம் அளிக்கப்பட்ட தொகை (விவரம் தெரிந்ததும் பெயர் விவரம் தெரிவிக்கப்படும்)	250.00
செங்கற்பட்டு தோழர் ஆர். கந்தசாமி அவர்கள் மூலம்	1,300.00
வடகரை இரா. சுப்பிரமணியம்	5.00
சக்கராப்பள்ளி இப்ராகிம்	8.85
கோவை ஈ. வி. சீனிவாசன்	20.00
சங்கர்நகர் நம்பிராசன்	5 00
ஆமதாபாத் சுந்தர்	4 00
வேலூர் மெய்கண்டான்	2.00
கோடம்பாக்கம் வேம்புலி இராவணன்	3.00
பெங்களூர் சீனிவாசன்	1 00
சென்னையில் 29-4-68 அன்று நடைபெற்ற 'சென்னை அரசு' நூல் வெளியீட்டு விழாவில் கழகப் பொருளாளர் அவர்களிடம் எஸ். எஸ். எம். பப்ளிகேஷன் சார்பில் தோழர் சுல்தான் அவர்களால் அளிக்கப்பட்ட தொகை	101.00
சென்னை—மயிலைப் பகுதி சார்பில் 28-5-68 அன்று நடைபெற்ற கூட்டத்தில் வீசப்பட்ட கல் ஒன்றைக் கழகப் பொருளாளர் அவர்கள் ஏலம்விட்ட வகையில் கிடைத்த தொகை	100.00
ஆக மொத்தம்	1,50,258.79

நடக்க இருப்பவை

6--6--68

குன்னத்தூர்

தி.மு.க. – எம்.ஜி.ஆர். மன்றச் சார்பில் கருணாநிதி பிறந்த நாள் விழா; மாலை 7 மணிக்கு சந்தைத் திடலில்; தலைவர்: கே. ஆர். திருமூர்த்தி; பேசுவோர்: க. அன்பரசு, கு. க. சுப்பிரமணியம், மற்றும் பலர்.

கமுதி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பாராட்டுக் கூட்டம்; மீனாட்சியம்மன் திடலில்; தலைவர்: எஸ். எஸ். தென்னரசு; பாராட்டுப் பெறுவோர்: தங்கபாண்டியன் எம்.எல்.சி., திருஞான சம்பந்தம் எம்.எல்.சி.; பாராட்டுவோர்: அமைச்சர் செ. மாதவன், மாங்குடி மதியழகன், ஆர். எம். அலியார், மு. கருமலையான், இல. மு. சாமி, டி.கே.எஸ். மதன மீரா, அ. அருணாசலம்.

கிழவன்னியூர்

தி. மு. க. சார்பில் மாலை 6 மணிக்கு; தலைவர்: என். அரங்கநாதன்; பேசுவோர்: என். வி. நடராசன் எம்.எல்.சி., ஏ. கோவிந்தராசன் எம்.எல்.ஏ., இராசாங்கம் எம்.எல்.ஏ., இரா. சக்கரவர்த்தி, பொன். சொக்கலிங்கம், புலவர் கூ. ஆறுமுகம், மற்றும் பலர்.

கரூர்

நகர தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு தியாகராயர் திடலில்; தலைவர்: பி. அந்தோணி எம்.சி.; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., வை. இரத்தினவேலு, என். ஆர். இராமசாமி, டி. கே. சின்னத்தம்பி, இரா. வைரப்பெருமாள் எம்.சி., டி. ஜி. பிச்சைமுத்து எம்.சி., பரமத்தி சண்முகம், சுப. இராசகோபால்.

7--6--68

பேட்டவாய்த்தலை

தி. மு. க. சார்பில் இரவு 7-30 மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: வை. ஆண்டியப்பன்; பேசுவோர்; கி. மனோகரன் எம்.பி., வி. எம். கணேசன், தியாகராசன், டி. என். வையாளி, மற்றும் பலர்.

அல்லித்துறை

தி. மு. க.—எம். ஜி ஆர் மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு சாவடி மைதானத்தில்; தலைவர்: கோ. கலியபெருமாள்; பேசுவோர்: கி. மனோகரன் எம்.பி., கு காமாட்சி, டி. என். வையாளி, வி. எம். கணேசன், அ. ஒ. முத்து, மற்றும் பலர்.

கொள்முதல் விலை

"தமிழகத்தில் கொள்முதலுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள விலை மிகவும் குறைவானது" என்று கூறி—கழக ஆட்சிமீது குற்றஞ்சாட்டி—'இந்த விலையைக் கூட்டவேண்டும்' என்று விவசாயிகளிடையே பேசி அவர்களை அதிக விலை கேட்குமாறு தூண்டிவிடும் பிரசாரத்தில் திரு. கருத்திருமன் ஈடுபட்டிருந்த நேரத்தில், மத்திய உணவமைச்சர் திரு. ஜெகசீவன்ராம், 'கொள்முதல் விலை நிர்ணயம் நியாயமானதே' என்றும், 'மேலும் கூட்டுவதற்கில்லை' என்றும் கூறியது நினைவிருக்கலாம்.

இதே பல்லவியை காங்கிரசுக் குழுக் கூட்டத்திலும் பாடியிருக்கிறார் கருத்திருமன் ! தமிழகத்தில் கொள்முதலுக்குக் கொடுக்கப்படும் விலை நியாயமற்றது என்றும் நாடு முழுவதிலும் ஒரே மாதிரியான விலை நிர்ணயிக்க வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியிருக்கிறார் !

பொதுப்பணித்துறை அமைச்சர்

மு. கருணாநிதி

சுற்றுப்பயணம்

ஜூன் 7 மாலை 3 மணி: தென்காசி பள்ளிக் கட்டிடத் திறப்பு; 4-30 மணி; சுந்தரபாண்டியபுரம் பாலத்துக்கு அடிக்கல் நாட்டல்; மாலை 6 மணி: ஏழைகட்கு நிலம் பட்டா வழங்கல்; படைவீரர் குடும்பங்கட்கு அன்பளிப்புகள் வழங்கல்; மாலை 7 மணி: சுணக்கப்பிள்ளைவலசை மேநிலைத் தொட்டித் திறப்புவிழா.

ஜூன் 8 தூத்துக்குடியில் மத்திய போக்குவரத்துத்துறை அமைச்சருடன் பின்வரும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பு—காலை 10-45 மணி; எட்டயபுரம் சாலையில் வரவேற்பு; 11 மணி முதல் 1 மணி வரை: தூத்துக்குடித் துறைமுகத்தைப் பார்வையிடல்; பகல் 1 மணி: தூத்துக்குடி படகு ஏஜெண்டுகள் சங்கச் சார்பில் விருந்து; மாலை 5-30 மணி: தூத்துக்குடி நகராட்சி வரவேற்பு; 6-மணி: தொழில்-வணிகக் கழக ஆண்டுவிழா; இரவு 7 30 மணி: நகரக் குழுச் சார்பில் பொதுக்கூட்டம்; 8-30 மணி: நகரக் குழுச் சார்பில் விருந்து.

ஜூன் 9 காலை 9 மணி: திருநெல்வேலி நிகழ்ச்சிகளில் பங்கேற்பு; மாலை: திருச்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

பேராசிரியர்

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

ஜூன் 6 காலை: இராசிபுரம், சேலம் திருமணங்கள்; மாலை: குருசாமிபாளையம், நாமகிரிப்பேட்டை, இராசிபுரம் பொதுக்கூட்டங்கள்.
ஜூன் 7 காலை: ஆரணி — திருமணம்; மாலை: பொதுக்கூட்டம்.
ஜூன் 8: சென்னை—பொதுக்கூட்டம்.
ஜூன் 9: திருத்துறைப்பூண்டி வட்டம்.
ஜூன் 10: நாகப்பட்டினம்—வள்ளுவர் விழா.
ஜூன் 14: களக்காடு (நெல்லை மாவட்டம்)
ஜூன் 15: நெல்லை நகர்.

அமைச்சர்

முத்துசாமி

சுற்றுப்பயணம்

ஜூன் 6 காலை 7 மணி: குலமுடையானூர்; 8-30 மணி: கொரத்துப்பட்டி; 10-30 மணி: இராசிபுரம்; 11-30 மணி: நகராட்சி நீர் வழங்கு திட்டத் துவக்க விழா; மாலை 4-30மணி: சந்தை மேட்டூர், மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 5-30 மணி: கீரப்பாப்பம்பாடி பள்ளிக் கட்டிடத் திறப்பு – மின்விளக்கேற்றல்; 6-30 மணி: ரெட்டிநாயக்கனூர் பள்ளிக் கட்டிடத் திறப்பு; 7-30 மணி: எளப்பிள்ளை பொது வரவேற்பு

ஜூன் 7 காலை 9 மணி: பூலாம்பட்டி மின்சாரப் பம்பு செட்டுகள் துவக்கவிழா; 10-30 மணி: கோனேரிப்பட்டி பள்ளிக் கட்டிடத் திறப்பு; பகல் 12 மணி: வெள்ளேரிவல்லி, கள்ளபாளையம் ஊராட்சி ஒன்றிய விழாக்கள்.

நலத்துறை அமைச்சர்

சாதிக் பாட்சா

சுற்றுப்பயணம்

ஜூன் 6 மாலை 3 மணி: பருத்தியூர்—மேநிலை குடிநீர்த் தொட்டித் திறப்பு; 3-30 மணி: கப்பளப்பட்டி ஆதித் திராவிட மக்கட்கு வீட்டு மனைப் பட்டா வழங்கல்; 4 மணி: மஞ்சநாயக்கனூர் அரிசி ஆலைத் திறப்புவிழா; 4-30 மணி: கோட்டூர்—வீட்டு மனைப் பட்டா வழங்கல்; 5 மணி: தென்சங்கப்பாளையம் வீட்டு மனை வழங்கல்; 5 30 மணி: சோமாந்துறை-சித்தூர் பள்ளிக் காய்கறித் தோட்டத் துவக்கவிழா; இரவு 7 மணி: வேட்டைக்காரன்புதூர் பொது மக்கள் வரவேற்பு.

ஜூன் 7: சி. டி. தண்டபாணி எம்.பி. அவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகளில் பங்கேற்பு.

ஜூன் 8 மாலை 6-30 மணி: திருச்சி மிலாத் விழாவில் பங்கேற்பு.

சிதம்பரம் நகர தி. மு. க. தோழர்கள்மீது நடவடிக்கை

தலைமைக் கழக விளக்கம்

சிதம்பரம் நகர தி. மு. கழகத் தோழர்கள் வி. வி. சுவாமிநாதன் பி.ஏ.,பி.எல்., கணபதி எம்.சி., முத்துத் தமிழரசன், இரத்தின பாலகுருசாமி ஆகியோர்மீது நகர தி.மு.க. கிளை எடுத்த ஒழுங்கு நடவடிக்கையை ரத்து செய்யுமாறு வேண்... செயற்குழு உ... பினர்கள் கேட்டுக்கொண்டிருப்பதா... திற்கு அறிவிக்கப்பட்டு, அதன் ... நடவடிக்கை ரத்து செய்யப்பட்டதா...

ஆனால், சிதம்பரம் நகர தி. மு. க... பினர்கள் கூடி முறைப்படி முடிவு ... என்று தெரியவருவதால், 13—6—6... பரம் நகர தி. மு. கழகப் பொது உறுப்... தைக் கூட்டி, அதனுடைய கருத்தைத் ... மாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

தலைமைக் கழகம் இறுதி முடிவு எடுக்கும்வரை ஏற்கனவே அறிவித்துள்ள உத்தரவு தற்காலிகமாக நிறுத்திவைக்கப்படுகிறது.

என். வி. நடராசன்
அமைப்புச் செயலாளர். தி.மு.க.

(1 ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மொழிவழி மக்கள் வாழ்கின்ற போதிலும், ஆங்கிலமே பேசுகிறார்கள்.

உலகிற்கு எடுத்துக்கூற என்ன செய்தோம்?

சென்னை கடற்கரை உலகிலேயே மிக நீளமான கடற்கரை. அப்படி இருந்தும், அதன் அழகை உலகிற்கு எடுத்துக் கூற நாம் ஒன்றும் செய்யவில்லை

சின்னஞ் சிறிய மியாமி, போர்ட்டோரிகோ கடற்கரைகள் உலகப் புகழ் பெற்றுப் பயணிகளை ...ழைத்துக் கோடிக்கணக் ...ாலர்களைக் சம்பாதிக் ...

... வளர்ச்சிக்குச் ... அரசி ...

திராவிட முன்னேற்றக் கழ... திரு. இரா. செழியன் எம்.ஏ., ... அவர்கள் ஆசிரியராகவும், வெ... பவராகவும், அச்சிடுபவராகவும் கொ... அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாரா... செட்டித் தெரு, சென்னை-13) அச்... வெளியிடப்படுகிறது.